மாண்புமிகு திரு. செ. மாதவன் : பள்ளிகளைப் பொறுத்த வரையில் கையெழுத்து திருத்தமாய் அமைய தேவையான ஏற்பாடுகள் மாணக்கர் களின் பாட திட்டத்திலேயே இடமளிக்கப்பட்டுள்ளது. ஆரம்பப் பள்ளி நிலையில்தான கையெழுத்தை நல்ல முறையில் திருத்தமுடியுமே தவிர கல்லூரி நிலையில் அல்ல.

Labourers of the Corporation of Madras

* 323 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Corporation workers met the Chief Minister on the 13th January 1968 ;

(*b*) the assurance given to them by the Chief Minister ; and

(*c*) the action taken thereon ?

சென்னை மாநகராட்சி தொழிலாளர்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சென்னை மாநகராட்சி தொழிலாளர்கள் 1968 ஜனவரி 13-ம் தேதி முதல் அமைச்சரை சந்தித்தார்களா ?

(இ) அவர்களுக்கு முதல் அமைச்சர் கொடுத்த வாக்குறுதி என்ன ?

(உ) வாக்குறுதியின் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இதுகுறித்து தகவல் எதுவும் இல்லை.

(இ) சென்னை மாநகராட்சித் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் 13—1—1968-ல் முன்னாள் முதலமைச்சரைச் சந்தித்ததாகக் கூறப்படும் நாளன்று அவர்களுக்கு அவர் என்ன உறுதிமொழி கொடுத்தார் என்பது பற்றி அரசு அறியாது.

(உ) இவ் வின எழவில்லை.

Strike by Madras Corporation Workers

* 324. Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the workers of the Madras Corporation struck work in December 1967 ; and

(*b*) if so, the nature of their demands ?

சென்னை மாநகராட்சி ஊழியர்கள் வேலை நிறுத்தம்

திரு என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1967 டிசம்பரில், சென்னை மாநகராட்சி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனரா ?

(இ) ஆமெனில், இவர்களின் கோரிக்கைகள் யாவை ?

31st March 1969]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.-தென் சென்னையில் துப்புரவுப் பணியாளர்கள் 29—12—1967 அன்று வேலை நிறுத்தம் செய்தனர். வட சென்னையின் தூய்மைப் பணியாளர்களையும் சேர்த்து சில மாநகராட்சித் தொழிலாளர் சங்கங்கள் 29—12—67 அன்று அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

(இ) இவர்களுடைய முக்கிய கோரிக்கைகள் :

(1) விலக்கு எதுவும் இன்றி மாநகராட்சிப் பணியாளர்கள் அனை வருக்கும் பயன்படுமாறு தொழிலாளர் வருங்காலச் சேமிப்பு நிதித் திட் டத்தை நீட்டிக்க வேண்டும்.

(2) தொழிலாளர் பூரிப்பு ஊதிய நிதியில் சேர்ந்துள்ள தொகை யைத் திருப்பிக் கொடுத்தல்.

Madras City Corporation Elections

* 325. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the number of persons caught and prosecuted for having tried to exercise false vote during Madras City Corporation Elections ; and

(*b*) the number of persons sentenced ?

சென்னை மாநகராட்சி தேர்தல்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) சென்னை மாநகராட்சி தேர்தலில் கள்ள ஓட்டுப் போட வந்தவர் கள் எத்தனை பேர் பிடிபட்டு வழக்கு தொடரப்பட்டது ?

(இ) எத்தனை பேர் தண்டனையடைந்தார்கள் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 1968-ம் ஆண்டு அக் டோபர் திங்களில் நடைபெற்ற மாநகராட்சித் தேர்தலில் 38 பேர் கைது செய்யப்பட்டனர். ஆள் மாறாட்டக் குற்றம் செய்ததாக அவர்கள் மேல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

(இ) இந்த 38 பேரில் இத்தகைய குற்றமிழைத்ததற்காக, 33 பேருக்கு இதுவரை நீதிமன்றம் தண்டனை வழங்கியுள்ளது. எஞ்சிய 5 வழக்குகள் விசாரணை தொடங்கப்படாத நிலையில் உள்ளன.

Chief Ministers' Conference on Community Development

* 326. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the States that took part in the All India State Chief Ministers' Conference on Community Development and Panchayats during 11th and 12th of June 1968 at Madras ;

(*b*) the decisions taken by the Conference ; and

(*c*) the action taken thereon ?